**செய்தி வெளியீடு எண்: 96/2023** **நாள்: 15.08.2023**

**பத்திரிக்கைச் செய்தி**

**சென்னை மெட்ரோ இரயில் நிறுவன தலைமை அலுவலகத்தில்**
**24 மணி நேரமும் பறக்க கூடிய பிரமாண்டமான தேசியக் கொடி**

சென்னை, நந்தனதில் உள்ள சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் தலைமை அலுவலகமான மெட்ரோஸில் சுதந்திர தின விழா இன்று (15.08.2023) நடைபெற்றது. சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குனரும் / முதன்மை செயலாளருமான மு.அ.சித்திக் தேசியக் கொடியை ஏற்றிவைத்து அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து, இவ்வலுவலக வளாகம் முன்பு 60 அடி (20 மீட்டர்) நீளம் கொண்ட கொடி கம்பத்தில் 18 அடி (5.48 மீட்டர்) அகலமும் 12 அடி (3.68 மீட்டர்) நீளமும் கொண்ட பிரம்மாண்டமான தேசிய கொடியை 24 மணி நேரமும் பறக்கக்கூடிய வகையில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குனர் மு.அ.சித்திக் ஏற்றிவைத்தார்.

இந்தக் கொடியை உயர்த்துவதற்கும் ஏற்றுவதற்கும் முழு மோட்டார் அமைப்பு பொருத்தப்பட்டுள்ளது. தானியங்கி நேர கட்டுப்பாட்டு கருவி உடன் இரவில் கொடி கம்பத்தின் உச்சியில் மின்விளக்கு ஒளிர்வதற்கான ஒளி-உமிழும் டையோட்கள் (LeD's) நிறுவப்பட்டுள்ளன. இடி, மின்னலை தாங்க கூடிய வகையிலும் தடுக்கும் வகையிலும் கொடிக் கம்பம் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், விமான விளக்குகள் கம்பத்தின் உச்சியில் பொறுத்தப்பட்டுள்ளது.

மூவர்ணக் கொடியின் அளவு இந்தியாவின் கொடி குறியீடு 2002-இன் படி உள்ளது (3:2 விகிதம்). இந்தியாவின் கொடி குறியீடு 2002-ன் படி கொடியை இயக்கவும், பராமரிக்கவும் தனிக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. கொடிக் கம்பம் ஒரு படிநிலை கிரானைட் மேடையில் நிலப்பரப்புடன் அமைக்கப்பட்டுள்ளது.

சென்னை சென்ட்ரல் இரயில் நிலையம் மற்றும் விமான நிலையத்தில் உள்ள பிரமாண்ட தேசிய கொடியை போன்று சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திலும் பிரம்மாண்ட தேசியக் கொடி இந்திய சுதந்திர தினமான இன்று (15.08.2023) ஏற்றப்பட்டுள்ளது.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**

**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600 035.**